1979 ஏப்ரல் 9]

மாண்புமிகு அமைச்சரவர்கள் அது நல்ல யோசனை என்று சொன்னார்கள். நான் ரொம்ப வருத்தத்தோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அமைச்சரவர்கள் தமிழிலே அவைகளைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகளைச் செய்வோம் என்று நம்பிக்கை ஏற்படுத்துகின்ற அளவுக்குப் பதில் சொல்லாமல் இப்படிச் சொல்வது வருத்தத்தை எற்படுத்துகிறது. ஆகவே அவற்றை தமிழில் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப் படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அந்தத் துறை பற்றிய அதிகாரம் என்னிடத்தில் இல்லை, என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணரவேண்டும். அது சட்டமன்ற சம்பந்தமான துறையைச் சார்ந்தவர்களிடத்தில் இருப்பதால் அவர்களிடத்தில் சொல்லிச் செய்ய வேண்டிய காரியம். ஆகவே தான் அதனை நல்ல யோசனை என்று சொன்னேன்.

திரு. [illegible]பாலன்: தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் அரசியல் அமைப்பு பாடங்கள் சொல்லித்தரப் படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்தப் பாடத்தைச் சொல்லிக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் அமர்த்தப்படுகின்றபோது வரலாற்றுப் பாடத்தைப் படித்தவர்கள் நியமிக்கப்படுகிறார்களா அல்லது பாலிடிக்ஸ் பாடம் படித்தவர்கள் நியமிக்கப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

விஞ்ஞானக் கல்வித் திட்டம்.

*வினா எண் 669—திரு. துரை முருகன் திரு. என் கிட்டப்பா மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் கூடிய விஞ்ஞானக் கல்வித் திட்டம் ஒன்றை அரசு நடத்தி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) & (ஆ) அவை முன்* விவர அறிக்கை** ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(** 494-497 பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளன)